4. இலக்கணம், இலக்கியம் மற்றும் மொழியியல் துறையில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழறிஞர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டில் 'உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்' வழங்கப்படும். விருதுபெறும் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும் தகுதியுரையும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் சீன மற்றும் அரபு மொழிகளில் மொழிபெயர்க்க என்னால் ஆணையிடப்பட்டு, மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ் மொழிக்கும் கொரிய மொழிக்கும் இடையே உள்ள தொடர்பின் அடிப்படையிலும், திருக்குறளை கொரிய மொழியில் மொழிபெயர்க்க வேண்டுமென்ற கொரிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையிலும், கொரியாவில் தமிழர்களும், தமிழகத்தில் கொரியர்களும் வாழ்ந்து வருவதைக் கருதியும், பார்போற்றும் உலகப் பொதுமறையாம் திருக்குறளை கொரிய மொழியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஓரடியில் உலக மக்களுக்கேற்ற எளிய அறநெறிக் கருத்துகளைக் கொண்ட தமிழ்மொழியின் அறநெறிக் கருவூலமான ஆத்திச்சூடியை சீன மற்றும் அரபு மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்புகள் தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழுக்கு தொண்டாற்றுபவர்களை ஊக்குவிக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கத்தி முனையைவிட பேனா முனை வலுவானது' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்குபவர்கள் பத்திரிகையாளர்கள். காலம் நேரம் பாராமல் உழைக்கின்ற*

2015 செப்டம்பர் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பத்திரிகையாளர்கள் தாங்கள் ஓய்வுபெறும் காலத்தில், மன நிறைவோடும், மன அமைதியோடும் வாழ்ந்திடவேண்டும் என்பதில் இந்த அரசு தனி அக்கறை கொண்டுள்ளது. அதன் அடிப்படையில்தான் கடந்த 2011 ஆம் ஆண்டில் இவ்வரசு பொறுப்பேற்றபின்பு, பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகியவை இரண்டு முறை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

20 ஆண்டுகள் பணியாற்றி, ஓய்வுபெற்று, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியம் 14–9–2011 முதல் 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாகவும், 7–10–2013 முதல் 6,000 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல், மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த, குடும்ப மாதாந்திர ஓய்வூதியம் 14–9–2011 முதல் 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், 7–10–2013 முதல் 3,000 ரூபாயிலிருந்து 4,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டு, அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11–10

எனினும் இன்றைய வாழ்க்கைச் சூழலைக் கருத்தில்கொண்டு, பத்திரிகையாளர் நலன் கருதி, அவர்களது ஓய்வு காலம் குறித்து ஒரு நம்பிக்கையும், இன்றைய வாழ்வின்மீது ஒரு பிடிப்பும் ஏற்படும் வகையில் இந்த ஓய்வூதியங்களை மேலும் உயர்த்தி வழங்க நான் முடிவெடுத்துள்ளேன்.

இதன்படி பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் 7,500 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் 4,500 ரூபாயிலிருந்து 4,750 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) திருவாடனை ஜவுளிப் பூங்கா, வேதாரண்யம் காஸ்டிக் சோடா தொழிற்சாலை உள்ளிட்ட தொழில் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியைப் பெருக்கி நாட்டின்